Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

விளம்பரதாரர்கள் தேவை

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

நடுநிலை நாளிதழ்

PRGI NO: TNBIL/25/A3556

செய்தியாளர்கள் தேவை



தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை


☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 22 | சனிக்கிழமை Saturday | 22.11.2025 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# ஆளுநருக்கு காலக்கெடு நிர்ணயிக்கப்படும் வரை ஓயமாட்டோம்

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேச்சு





சென்னை:

மாநில உரிமைகளையும், உண்மையான கூட்டாட்சியையும் நிலைநாட்டும் நமது போராட்டம் தொடரும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில்; சட்டமுன்வடிவுகள் மீது முடிவெடுக்க ஆளுநர்களுக்குக் காலக்கெடு விதிக்கும் வகையில் அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்படும் வரை நாம் ஓயமாட்டோம். குடியரசுத் தலைவரின் கேள்விகளுக்கு உச்சநீதிமன்றம் அளித்துள்ள விளக்கங்கள் ஆளுநருக்கு எதிராகத் தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கில் பெற்ற 8 ஏப்ரல் 2025 தீர்ப்பின் மீது எந்தத் தாக்கத்தையும் செலுத்தாது.

சொல்லப் போனால், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுதான் ஆட்சியைச் செலுத்த வேண்டும், மாநிலத்தில் இரண்டு அதிகார மையங்கள் இருக்க முடியாது. அரசியலமைப்புச் சட்டத்தின் சட்டகத்துக்குட்பட்டே அரசியலமைப்புப் பதவியில் இருப்போர் செயல்பட வேண்டுமே ஒழிய, அரசியலமைப்பை மீறிச் செயல்படலாகாது. சட்டமுன்வரைவுக்கு ஒப்புதல் மறுப்பது / (தமிழ்நாடு ஆளுநர் செய்தது போல) காலவரையின்றி ஒப்புதல் வழங்காமல் நிறுத்தி வைப்பது எனும் நான்காவது விருப்பத் தேர்வு ஆளுநருக்கு இல்லை.

மசோதாக்களின் மீது முடிவெடுக்காமல் காலவரையின்றி ஆளுநர் தாமதம் செய்ய இயலாது. அப்படி, எந்த விளக்கமும் இல்லாமல் நீண்டகாலம் இழுத்தடித்தால், மாநிலங்கள் நீதிமன்றங்களை அணுகலாம். ஆளுநர்கள் வேண்டுமென்றே தாமதிப்பதற்கு எதிராக வழக்கு தொடுத்து, கேள்விக்குட்படுத்தி நியாயம் பெறலாம்.

- என்பனவற்றைத் தனது விளக்கத்தில் உச்சநீதிமன்றஅமர்வு மீண்டுமொருமுறை உறுதிப்படுத்தியுள்ளது.

மேலும், புனித சேவியர் கல்லூரி, அகமதாபாத் v. குஜராத் அரசு (1974) 1SCC717 வழக்கின் தீர்ப்பில் (பத்தி 109), 9 நீதிபதிகள் கொண்ட அமர்வானது, "நீதிமன்றங்கள் தெரிவிக்கும் கருத்துகள் என்பவை அரசு தலைமை வழக்கறிஞர்கள் தெரிவிக்கும் கருத்துகளைப் போன்றவை என்பதைக் கடந்து அவற்றுக்கென எந்த மதிப்பும் இல்லை எனத் தெளிவாகக் கூறியுள்ளது.

காலவரையின்றிக் காலம்தாழ்த்தலாம், சட்டமுன்வடிவுகளுக்கு ஆளுநர்கள் ஒப்புதல் மறுக்கலாம் எனும் தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் கூற்றை உச்சநீதிமன்றத்தின் நேற்றைய கருத்து மீண்டுமொருமுறை நிராகரித்துள்ளது. தமிழ்நாடு ஆளுநர் உட்பட மாநில அரசுகளுடன் மல்லுக்கட்டும் அனைத்து ஆளுநர்களும் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளின் வழியில்செயல்படவேண்டும் என்பதையும், மக்களின் விருப்பத்தைச் சட்டமியற்றி நிறைவேற்றும்போது, வேண்டுமென்றே ஒப்புதல் அளிக்காமல் காலத்தைக் கடத்தினால் நீதிமன்றங்களில் அதற்குப் பதில் சொல்லியாக வேண்டுமென்பதையும் நமது சட்டப்போராட்டத்தின் மூலம் கட்டாயமாக்கியுள்ளோம்! அரசியல் சட்டப்பிரிவு 361-க்குப் பின்னால் ஆளுநர்கள் ஒளிந்துகொள்ள முடியாது என்பதையும் உறுதிப்படுத்தி உள்ளோம்.

அரசியல் சட்டத்தால் அமையப்பெற்ற எந்தப் பதவியும் அச்சட்டத்துக்கு அப்பாற்பட்டதில்லை என நான் திடமாக நம்புகிறேன். உயர்ந்த அரசியலமைப்புப் பதவிகளில் இருப்போரே அரசியலமைப்புச் சட்டத்தை மீறி நடந்தாலும், நீதிமன்றங்கள்தான் ஒரே நம்பிக்கை. ஆகவே, நீதிமன்றங்களின் கதவு தீர்வுபெறத் திறந்தே இருக்க வேண்டும். அது தனது கதவுகளை அடைத்தால், நமது அரசியலமைப்பின்படியான மக்களாட்சியில் சட்டத்தின் ஆட்சியைச் சிறுமைப்படுத்திவிடும்; அரசியல் உள்நோக்கத்தோடு செயல்படும் ஆளுநர்கள் அரசியலமைப்புச் சட்டத்துக்குப் புறம்பாக நடந்துகொள்வதை ஊக்குவிக்கும். தமிழ்நாட்டு மக்களின் விருப்பத்தைச் சட்டங்களின் மூலம் நிறைவேற்ற, அரசியலமைப்புச் சட்டத்துக்குட்பட்டு அரசியலமைப்புக் கருவிகள் செயல்படுவதை உறுதிசெய்யத் தொடர்ந்து உழைப்போம்! எங்கள் வாக்கைக் காப்பாற்றுவோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

# துபாயில் விமான கண்காட்சியின்போது தேஜஸ் போர் விமானம் தரையில் விழுந்து விபத்து; சம்பவ இடத்திலேயே விமானி பலி





புதுடெல்லி:

துபாய் விமான கண்காட்சியில் இந்திய விமானப்படையின் தேஜாஸ் போர் விமானம் கீழே விழுந்து வெடித்துச் சிதறியது. இந்த விபத்தில் விமானி உயிரிழந்தார்.

துபாயில் உள்ள அல் மக்டோம் சர்வதேச விமான நிலையத்தில் கடந்த 17-ம்தேதி விமான கண்காட்சி 2025 தொடங்கியது. விமான கண்காட்சியின் கடைசி நாளான இன்று, இந்திய விமானப் படையின் தேஜாஸ் விமானத்தின் சாகச நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த கண்காட்சியைக் காண ஏராளமானோர் கூடி இருந்தனர்.

இந்நிலையில், தேஜாஸ் விமானம் பறக்கத் தொடங்கிய சிறிது நேரத்திலேயே மைதானத்தில் கீழே விழுந்து வெடித்துச் சிதறியதாக கலீஜ் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. உள்ளூர் நேரப்படி இன்று பிற்பகல் 2.15 மணி அளவில் இந்த விபத்து நேரிட்டுள்ளது. விமானி வெளியேறிவிட்டாரா என்பது குறித்து இதுவரை தகவல் இல்லை. இந்த விபத்தை அடுத்து, விமான கண்காட்சி தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

இந்த விபத்தை உறுதிப்படுத்தியுள்ள இந்திய விமானப் படை, "விபத்து குறித்து விசாரணை மேற்கொள்ளப்படும் என தெரிவித்துள்ளது. இது தொடர்பாக இந்திய விமானப்படை தனது எக்ஸ் பக்கத்தில், துபாய் விமான கண்காட்சியில் இன்று நடைபெற்ற வான் கண்காட்சியின் போது இந்திய விமானப்படையின் தேஜாஸ் விமானம் விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் விமானி உயிரிழந்தார்.

உயிர் இழப்புக்கு இந்திய விமானப் படை ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறது. இந்த துயரமான நேரத்தில் உயிரிழந்த விமானியின் குடும்பத்தினருடன் இந்திய விமானப் படை உறுதியாக நிற்கிறது. விபத்துக்கான காரணத்தைக் கண்டறிய விசாரணை நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளது." எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய விமானப்படையின் தேஜாஸ் லகு ரக போர் விமானம் முதன்முறையாக கடந்த ஆண்டு மார்ச் 12-ம் தேதி ஜெய்சல்மாரில் நடைபெற்ற ஒரு பயிற்சிப் பயணத்தின் போது விபத்துக்குள்ளானது. இந்நிலையில், தற்போது துபாயில் விபத்துக்குள்ளாகி உள்ளது. விமானம் விபத்துக்குள்ளானதன் வீடியா காட்சிகள் சமூக வலைதளங்களில் வெளியாகி உள்ளன.

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ஜெட் விமானமான தேஜாஸ், தனது முதல் விமானத்தை கடந்த 2001, ஜனவரி 4-ம் தேதி இயக்கியது. ஒற்றை எஞ்சின் கொண்ட இந்த உள்நாட்டுப் போர்விமானத்துக்கு அப்போதைய பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய், தேஜாஸ் என பெரிட்டார்.

# கோவை, மதுரை மெட்ரோ ரெயில் திட்டம்; மாநில அரசிடம்தான் குளறுபடி உள்ளது

## அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி பேச்சு



சேலம்

அதிமுக பொதுச்செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி சேலம் விமான நிலையத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

மேகதாது அணை விவகாரத்தில் தமிழக அரசு மெத்தனமாக உள்ளது. மேகதாதுவில் அணை கட்ட கர்நாடக அரசுக்கு எந்த உரிமையும் இல்லை. கர்நாடகாவில் மேகதாது அணை கட்டினால் காவிரி படுகை மாவட்டங்கள் பாலைவனமாகிவிடும். மேகதாது அணை கட்டுவதை தடுக்க தமிழ்நாடு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். கர்நாடகாவில் காங்கிரஸ் ஆட்சி உள்ளது. இந்தியா கூட்டணியில் உள்ள முதல்-அமைச்சர் ஸ்டாலின் இதுகுறித்து பேசவேண்டும். ராகுல் காந்தி, சோனியா காந்தியிடம் பேசி முதல்வர் சுமுகமான முடிவை எட்ட வேண்டும்.

மெட்ரோ ரெயில் திட்ட அறிக்கையை திமுக அரசு கவனக்குறைவாக அனுப்பியுள்ளது. திட்ட அறிக்கையை சமர்ப்பித்த போது 2011 மக்கள் தொகையை திமுக அரசு குறிப்பிட்டது ஏன்? 2025-ம் ஆண்டு மக்கள் தொகையை கணக்கிட்டு அனுப்பியிருந்தால் ஒப்புதல் கிடைத்திருக்கும். கோவை, மதுரை மெட்ரோ ரெயில் திட்டங்கள் தொடர்பாக விரிவான அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. கோவை, மதுரை மெட்ரோ ரெயில் திட்டத்தில் மாநில அரசிடம் தான் குளறுபடி உள்ளது. 2021-ம் ஆண்டு திமுக ஆட்சிக்கு வந்த பிறகு மெட்ரோ ரெயில் திட்டத்தை கிடப்பில் போட்டுவிட்டது.

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு மிக மோசமாக உள்ளது. ராமேஸ்வரத்தில் பள்ளி மாணவியை கொல்லும் அளவுக்கு சட்டம், ஒழுங்கு சீரழிந்துள்ளது. நிரந்தர டிஜிபியை நியமிக்காமல் தமிழக அரசு கும்பகர்ணன் போல் தூங்கிக் கொண்டிருக்கிறது. நிரந்தர டிஜிபியை நியமிக்காமல் சட்டம் ஒழுங்கு எப்படி சீராகும்? ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் மக்களுக்கு சந்தேகம் உள்ளது. ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் சிபிஐ விசாரணையை அரசு எதிர்ப்பது ஏன்?

தமிழகத்தில் எஸ்.ஐ.ஆர் பணிகள் முறையாக நடக்கவில்லை. தாம்பரத்தில் ஒரே கதவு எண்ணில் 360 வாக்காளர்கள் உள்ளனர். போலி வாக்காளர்களை நீக்கக்கோரி மாவட்டந்தோறும் மனு அளித்துள்ளோம். தேர்தல் ஆணையர் மீது டெல்லி தேர்தல் ஆணையத்திடம் அதிமுக புகார் கூறியுள்ளது. நெல் ஈரப்பத அளவை உயர்த்த வலியுறுத்தியுள்ளோம். திமுக அரசு முறையாக நெல் கொள்முதல் செய்யவில்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

## மீண்டும் ரூ.92 ஆயிரத்திற்கு கீழ் குறைந்த தங்கம் விலை...

தங்கம் விலை தொடர்ந்து ஏறுவதும், பின்னர் இறங்குவதுமான சூழலே நீடிக்கிறது. அப்படியாக கடந்த 14-ந்தேதியில் இருந்து விலை குறைந்து வந்த நிலையில், நேற்று முன்தினம் விலை அதிகரித்து இருந்தது. இதன் தொடர்ச்சியாக நேற்று விலைகுறைந்துகாணப்பட்டது. நேற்று முன்தினம் ஒரு கிராம் ரூ.11 ஆயிரத்து 600-க்கும், ஒரு சவரன் ரூ.92 ஆயிரத்து 800-க்கும் விற்பனை ஆனது. நேற்றைய நிலவரப்படி, கிராமுக்கு ரூ.100-ம், சவரனுக்கு ரூ.800-ம் குறைந்து, ஒரு கிராம் ரூ.11 ஆயிரத்து 500-க்கும், ஒரு சவரன் ரூ.92 ஆயிரத்துக்கும் விற்பனை செய்யப்பட்டது. வெள்ளி விலையும் நேற்று குறைந்திருந்தது. கிராமுக்கு ரூ.3-ம், கிலோவுக்கு ரூ.3 ஆயிரமும் குறைந்து, ஒரு கிராம் ரூ.173-க்கும், ஒரு கிலோ ரூ.1 லட்சத்து 73 ஆயிரத்துக்கும் விற்பனை ஆனது.

இந்நிலையில் தங்கம் விலை மேலும் குறைந்துள்ளது. அதன்படி கிராமுக்கு ரூ.40-ம், சவரனுக்கு ரூ.320-ம் குறைந்து, ஒரு கிராம் தங்கம் ரூ.11,460 -க்கும், ஒரு சவரன் ரூ.91,680-க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

வெள்ளி விலையை பொறுத்தவரையில், கிராமுக்கு ரூ. 4 குறைந்து ஒரு கிராம் ரூ.169-க்கும். ஒரு கிலோ ரூ.1 லட்சத்து 69 ஆயிரத்துக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# புனிதமும் மனிதமும்

Dr. R. சிவகுமார், IPS.,
Cell:9842126150




பெற்றதால் மட்டுமே கிட்டுவது அனைத்துமே நன்மையென நம்பாதீர்.

உள்ளத்தின் வயதினை அனுபவத்தால் நிரப்பி ஆராய்ந்து உணரும் உண்மைகளை நம்புங்கள்.

பதின்ம வயதில் பருவங்களில் தாக்கத்தில் அலைபாயும் மனது அனைவருக்கும் உண்டு தடம்மாறாது தடுமாறாது கொஞ்சம் தாக்குப்பிடித்தால் வாழ்க்கை உங்களை உற்சாகமாக தூக்கிப் பிடிக்கும்.

சிறகுகள் முளைத்து புதிதாய் பறக்கும்போது பயணிக்கும் திசையை தட்ப வெப்பத்தை பருவ மாற்றத்தை கணிக்கத் தவறிய பயணங்கள் யாவும் பாதகமாய் முடிகிறது

தானாக தனியாக உண்ணத் தொடங்குவதில்பெருமைகள் இல்லை உண்ணப் போவது அமுதா நஞ்சா என்று அறிந்து செயல்படுவதே உண்மையான பெருமை

நடக்கத் தொடங்கியவுடன் பெற்றோர் கைகளை உதறித் தள்ளவேண்டாம் பள்ளம் மேடுகள் குழிகள் சகதிகள் என பாதையில் தன்மையைமுழுமையாய்அறிந்தபின் தனியாக பயணியுங்கள்

உடலின் வயதைஎட்டி உரிமை அனுபவம் பெறுவதை ஆனந்தமாய் உணர்ந்தாலும் இறந்து பார்க்கும் ஒத்திகை வேதனையை இளமையில் பெறவேண்டாம்.

உடல் பாதுகாப்பை உள்ளத்தின் கட்டுப்பாடு உறுதிப் படுத்தும்.

பாதைகள் மாறிய குழந்தைகளின் மீதுகூடுதல்பாசத்தைக்கொட்டுங்கள் பெற்றோர்களே..

வழிதவறிய சந்ததிகளை வாஞ்சையுடன் அரவணையுங்கள் பெரியோர்களே.. அனுபவ

கண்ணீர் விழிகளுடன் கைகூப்பி வேண்டுகி

காதல்செய்வதில்புனிதம்காட்டுங்க அதைக் கண்டிப்ட மனிதம் காட்டுங்கள்:

# தென்காசி மேலகரத்தில் வீரபாகு சேனைத்தலைவர் வீரத்திருவிழா; நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாட்டம்

தென்காசி மாவட்ட கொடிக்கால் மக்கள் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வீரத் தளபதி வீரபாகு சேனைத்தலைவர் காசி மாவட்ட பாஜக தலைவர் ஆனந்தன் ஐயா சாமி அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு நலத்திட்ட உத-






விகளை வழங்கி வீரத்திருவிழாகொண்டாடப்பட்டது தென்காசி அருகே உள்ள மேலகரம் வி எம் மஹாலில் நடைபெற்ற விழாவிற்கு குடிக்கால் மக்கள் முன்னேற்ற கழக நிறுவன தலைவர் முத்து விஜயன் தலைமை தாங்கினார் பொறுப்பாளர் யாஸ்முத்து மாநில துணைச் செயலாளர் முருகன் தென்காசி மாவட்ட இளைஞரணி பொறுப்பாளர் வினோத் ஆகியோர் முன்னில வகித்தனர் அன்பு பாலா வரவேற்புரையாற்றினார் கொடிக்கால் மக்கள் முன்னேற்ற கழக தலைவர் முத்து விஜயன் தலைமை உரையாற்றினார் அவரைத் தொடர்ந்து புதிய நீதிக் கட்சி தென் மண்டல செயலாளர். வெங்கடாசலம் பிள்ளை திருநெல்வேலி மாவட்ட பாரதியார் ஜனதா கட்சியின் மாவட்ட செயலாளர் மாரியப்பன் ஆகியோர் உரையாற்றினர் அவர்களை தொடர்ந்து தென்-

சிறப்புரையாற்றினார் அவர் வீரபாகு பற்றி கூறியதாவது வீரபாகு என்பவர் முருகப்பெருமானின் முதன்மை தளபதிகளில் ஒருவர். இவர் நவவீரர்கள் எனப்படும் முருகனின் ஒன்பது தளபதிகளில் மூத்தவர். சக்தி தேவியின் ஆபரணங்களிலிருந்து தோன்றிய நவவீரர்களில், மாணிக்கவல்லி என்ற தெய்வீக சக்தி பெற்ற பிள்ளையே வீரபாகு ஆவார். கந்த புராணம் மற்றும் ஸ்கந்த புராணம் போன்ற நூல்களில் வீரபாகுவின் வரலாறு விவரிக்கப்பட்டுள்ளது. சிவனின் மூன்றாவது கண்ணிலிருந்து தோன்றிய முருகப்பெருமானுக்கு உதவ, சக்தி தேவியின் காலில் இருந்த ஆபரணங்களிலிருந்து ஒன்பது தளபதிகள் தோன்றினர். இவர்களில் மூத்தவரே வீரபாகு.

வீரபாகு, முருகனின் படைத்தளபதியாகக் கருதப்படுகிறார். கந்தபுராணத்தின்படி, அசுரர்களை அழிக்கும் போரில் அவர் முக்கியப் பங்கு வகித்தார்.

வீரபாகு, மற்ற எட்டு வீரர்களுடன் சேர்ந்து நவவீரர்கள் என அழைக்கப்ப டுகிறார்கள். வீரபாகு இந்த ஒன்பது வீரர்களின் மையமாக விளங்குகிறார்.

இலக்கியங்களில்: சோழன் பூர்வ பட்டயம், ஈட்டி எழுபது போன்ற பல்வேறு இலக்கியங்களில் வீரபாகு பற்றிய குறிப்புகள் உள்ளன.

இன்று, வீரபாகு செங்குந்தர் குலத்தினர் மற்றும் சேனைத்தலைவர் இனத்தின் குலதெய்வ மாக வணங்கப்படுகிறார்.

வீரபாகு என்பவர் தமிழ்கடவுள் முருகனின் இராணுவத்தின் தளபதிகளுள் ஒருவர் ஆவர். மேலும் கொடிக்கால் மக்கள் முன்னேற்றக் கழகத்தின் தலைவர் அவர்களின் கோரிக்கையை பாரத பிரதமர் மோடி அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று உரிய இட ஒதுக்கீடு வழங்க அனைத்து நடவடிக்கையும் பாரதிய ஜனதா கட்சி சார்பில் செய்யப்படும் என தெரிவித்தார்




மதுரை மாவட்ட விளையாட்டு அரங்க வளாகத்தில் வரும் 28112025 முதல் 10.12.2025 வரை நடைபெறவுள்ள 14வது ஹாக்கி இளையோர் உலகக்கோப்பை விளையாட்டு போட்டிகளில் பங்கேற்க மதுரை மாவட்டத்திற்கு வருகை தந்த அயர்லாந்து நாட்டை சேர்ந்த விளையாட்டு வீரர்களை (21.11.2025) மதுரை விமான நிலையத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., அவர்கள் தமிழர் பாரம்பரிய முறைப்படி வரவேற்றார்.



## மதுரை திமுக மாவட்ட செயலாளர் தளபதி தலைமையில்

# காங்கிரஸ், கம்யூனிஸ்ட் உள்ளிட்ட திமுக கூட்டணி கட்சியினர் 1000க்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டம்

மதுரை திமுக மாவட்ட செயலாளர் தளபதி தலைமையில், காங்கிரஸ், கம்யூனிஸ்ட் உள்ளிட்ட திமுக கூட்டணி கட்சியினர் 1000 க்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகின்றனர்.

மெட்ரோ திட்டம் வடிவமைக்கப்பட்டு இதற்கான விரிவான திட்ட அறிக்கையானது. கடந்த 2023 ஆம் ஆண்டு ஜூலை மாதம் மத்திய வீட்டு வசதி நகர்ப்புற அமைச்சகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த விரிவான திட்ட அறிக்கையில் ஆய்வு செய்த மத்திய அரசு கூடுதல் ஆவணங்களுடன் மீண்டும் விரிவானதிட்ட அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என்று திருப்பி அனுப்பப்பட்டது.

கூட்டணி கட்சிகளின் ஆர்ப்பாட்டம்

இதனை ஏற்று தமிழக அரசு கூடுதல் கவனமுடன் கடந்த 2024 பிப்ரவரி மாதம் மீண்டும் விரிவானதிட்ட அறிக்கையை சமர்ப்பிக்கப்பட்டது. 19 மாதங்கள் ஆகியும் இதற்கான எந்த ஒரு ஒப்புதலும் வழங்கப்படாமல் இருந்த நிலையில் தற்போது மீண்டும் தமிழக அரசு அனுப்பி இருந்தால் விரிவான திட்ட அறிக்கையை மேலும் சில விளக்கங்களை கேட்டு தமிழக அரசிடம் மீண்டும் அனுப்பப்பட்டுள்ளது. சமூக ஆர்வலர் ஒருவர் இது குறித்து எப்போது ஒப்புதல் வழங்கப்படும் என தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலமாக கேட்டிருந்தார். அதற்கான பதில் அளிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசு அனுப்பி உள்ள திட்ட அறிக்கை மீண்டும் தமிழக அரசுக்கு அனுப்பி உள்ளதாக அதில் பதில் அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலமாக தான் தகவல் வெளியானது. எனவே இந்த கோவை மெட்ரோ திட்டத்தின் மத்திய அரசு நிராகரித்ததை கண்டித்து, கோவையில் நேற்று திமுக கூட்டணி கட்சிகள் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த நிலையில், மதுரை பழங்காநத்தம் பகுதியில் மாவட்ட செயலாளர் தளபதி தலைமையில் கம்யூனிஸ்ட், காங்கிரஸ், விசிக உள்ளிட்ட திமுக கூட்டணி கட்சியினர் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்

# மதுரை மாவட்டம் திருமங்கலம் மாரியம்மன் கோவில் அருகே பள்ளி வேன் தீப்பிடித்து விபத்து





மதுரை மாவட்டம் திருமங்கலம் மாரியம்மன் கோவில் அருகே உள்ள அரசு உதவி பெறும் பள்ளியான பி கே என் ஆரம்பப்பள்ளி மற்றும் பி கே என் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பயிலக்கூடிய ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரையிலான 24 பள்ளி குழந்தைகளை அருகில் உள்ள கிராமங்கள் ஆன சவடார்பட்டி கிழவனேரி ஆலம்பட்டி உள்ளிட்ட பகுதியில் இருந்து பள்ளி மினி பேருந்தில் இன்று காலை ஏற்றிக்கொண்டு வந்தனர். பேருந்தை ஓட்டுநர் ரவிச்சந்திரன் என்பவர் ஓட்டி வந்தார். பள்ளி குழந்தைகளுக்கு உதவியாக பாண்டியம்மாள் என்பவர் பேருந்தில் வந்து கொண்டிருந்தார் பேருந்து ராஜபாளையம் திருமங்கலம் தேசிய நெடுஞ்சாலையில் இருந்து விருதுநகர் மதுரை நான்கு வழிச்சாலையில்சென்று கொண்டிருந்தது நான்கு வழிச்சாலையில் சென்ற சில நிமிடங்களிலேயே பேருந்தில் இருந்து திடீரென புகை வந்ததால் ஓட்டுநர் ரவிச்சந்திரன் சுதாரித்து உடனடியாக பேருந்து நிறுத்தி உதவியாளருடன் பள்ளி குழந்தைகள் அனைவரையும் பத்திரமாக கீழே இறக்கி விட்டனர் பேருந்தில் புகை வருவதைக் கண்ட அப்பகுதியில் வந்த வாகன ஓட்டிகளும் பேருந்து நின்ற இடத்தில் இருந்த தனியார் பேக்கரி ஊழியர்களும் விரைந்து சென்று பள்ளி மாணவர்களை புனிதமாக செயல்பட்டு பத்திரமாக மீட்டனர். மாணவர்களை மீட்டு பேருந்தில் பரவிய தீயை அணைப்பதற்குள் தீ மளமளவென பரவி பேருந்து முழுவதும் தீப்பற்றி எரிந்தது. உடனடியாக தீயணைப்பு துறைக்கு தகவல் அளிக்கப்பட்டதுதகவல்அறிந்து வந்த திருமங்கலம் தீயணைப்பு நிலைய அலுவலர் உதயகுமார் தலைமையிலான தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திற்கு வந்தனர் அவர்கள் வருவதற்குள் பேருந்து முழுவதும் எரிந்து சாம்பலானது தொடர்ந்து விரைந்து செயல்பட்ட தீயணைப்புத்துறையினர் தீயைமேலும்பரவவிடாமல்கட்டுக்குள்கொண்டு வந்தனர். இச்சம்பவம் அப்பகுதியில் வரும் பரபரப்பை ஏற்படுத்தியது, பேருந்து தீப்பற்றிலிருந்து தகவல் பள்ளி நிர்வாகத்துக்கு தெரிவிக்கப்பட்டு பள்ளி மாணவர்கள் அனைவரையும்பத்திரமாகநேற்று மாற்று பேருந்தில் பள்ளி நிர்வாகம் அனுப்பி வைத்தது. சம்பவம் குறித்து திருமங்கலம் நகர் காவல் நிலைய போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது சம்பவ இடத்திற்கு வந்த போலீசார் விபத்து தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். பள்ளிக் குழந்தைகளை ஏற்றி வந்த இனி பேருந்து தீப்பற்றி எரிந்த சம்பவம் திருமங்கலம் பகுதியில் பெறும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது



தென்காசி மாவட்டம் சுண்டை நகராட்சி பகுதிகளில் திமுக தெற்கு மாவட்ட செயலாளர் பொறுப்புஜெயபாலன் ,திமுகநிர்வாகிகள் நகர நிர்வாகிகள் .தி.மு. கநகரசெயலாளர்கணேசன் ,தி.மு.க.தெற்குமாவட்டசுற்றும்ச்சூழல்எம்.கே.முத்துக்குமார் மற்றும் சில கட்சி அமைப்புகள் அனைவரும் கலந்து கொண்டனர் வாக்காளர் பட்டியல் தீவிர சிறப்பு கணக்கெடுப்பு நடைபெற்று வரும் நிலையில், பொதுமக்கள் மற்றும் வாக்காளர்கள் படிவங்களை நிரப்பி வழங்க உதவி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.இந் தமையங்களில்வாக்காளர்கள்ஆர்வத்துடன்படிவங்களை பூர்த்தி செய்து சமர்ப்பித்துவருகின்றனர்.


# வரி விளம்பரங்கள்



தினத்தளம்
DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் |
| நினைவு நாள் | ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் |
| நகைக்கடன் | வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் |

தொடர்புக்கு : ☎ +919444082959




சேலம் மாவட்டம் ஓமலூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் (21.11.2025) நடைபெற்ற கொப்பரை தேங்காய் ஏலத்தில் 19 விவசாயிகள் மற்றும் 2 வியாபாரிகள் பங்கேற்றனர். அவர்கள் கொண்டு வந்த 102 மூட்டை தேங்காய் பருப்பு, அதிகபட்சமாக கிலோ ரூ.195.05க்கும், குறைந்தபட்சமாககிலோரூ.25.05க்கும்,சராசரியாககிலோ ரூ.186.69க்கும் ஏலம் போனது. இதன் மூலம் மொத்தம் ரூ.6,25,918.18 வருவாய் ஈட்டப்பட்டதாக ஒழுங்குமுறை விற்பனைக்கூடகண்காணிப்பாளர் ஆனந்தி தெரிவித்தார்.

# கீரணிப்பட்டியில் கோச்சடையமாறனின் கி.பி.9 ஆம் நூற்றாண்டு கல்வெட்டு கண்டுபிடிப்பு

சிவகங்கை மாவட்டம், திருப்புத்தூர் வட்டம், கீரணிப்பட்டி கிராமத்தில் ஒரு கல்வெட்டு இருப்பதாக அக்கிராமத்தைச் சேர்ந்த லட்சுமணன், பெரியகருப்பன்,பழனியாண்டி,புகழேந்தி,மெய்யர், அடைக்கப்பன், பெருமாள் ஆகியோர் தந்த



தகவலையடுத்து, காரைக்குடி அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் வரலாற்றுத்துறை இணைப் பேராசிரியர் முனைவர் வேலாயுதராஜா மற்றும் புதுக்கோட்டை தொல்லியல் கழகத் தலைவர் கரு. ராஜேந்திரன் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டு கல்வெட்டைப் படியெடுத்தனர். அக்கல்வெட்டில் உள்ள செய்தி குறித்து அவர்கள் தெரிவித்ததாவது, கீரணிப்பட்டியில்உள்ளகண்மாய்பகுதியில்உள்ள ஒரு பலகைக்கல்லில் இருபுறமும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. கல்வெட்டின் பின் பகுதியில் நின்ற நிலையில் ஒரு குதிரையின் உருவமும் செதுக்கப்பட்டுள்ளது.

கோச்சடையமாறனின் 10ஆவது ஆட்சியாண்டில் இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டதாகக் குறிக்கப்பட்டுள்ளது. சூரலூர் கூற்றத்து சூலூர்பேட்டையில் இருந்து வாழும் ஆருவாரிக்கு ஸ்ரீ கோச்சடையமாறரின் ஆட்சிக்காலத்தில் கீரனூரில் பாவண்ஏரி பகுதியில் அரை மாச்செய் நிலம் ஊரார் தானம் கொடுத்த செய்தியைத் தெரிவிக்கிறது. இதை மாற்றுபவர் இவ்வூரை அழித்த பாவம் கொள்வான் என்ற செய்தியைக் கூறுகிறது. பண்டைய கீரனூரே தற்போதைய கீரணிப்பட்டியாக மருவியுள்ளதாகக் கருதலாம். முதலாம் வரகுண பாண்டியனுக்குப் பின்னர் அவனது புதல்வனாகிய சீமாறன் சீவல்லபன் (கி.பி. 835–862) ஆட்சிக்கு வந்தான். சீமாறன் சீவல்லபனுக்குச் சடையன் மாறன் என்ற பெயரும் உண்டு. இவரது வரலாற்றைச் சின்னமனூர்ச் செப்பேடுகளும், தளவாய்புரச் செப்பேடுகளும், சித்தன்னவாசல் கல்வெட்டு மற்றும் சில கல்வெட்டுகளும் கூறுகின்றன. இவருக்கு முந்தைய ஆட்சியாளராகிய மாறன் சடையனின் வட்டெழுத்துக் கல்வெட்டு கீரணிப்பட்டிக்கு அருகில் உள்ள திருப்புத்தூர் திருத்தளிநாதர் கோயிலில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

# கோவை சின்னியம்பாளையம் பகுதியில் சந்திரா ஹீண்டாய் 10 வது ஷோரும் துவக்க விழா நிகழ்ச்சி நடைபெற்றது

## துவக்க விழாவை முன்னிட்டு புதிய ஆல் நியூ ஹீண்டாய் வெள்யூ கார் அறிமுகம் செய்யப்பட்டது

கார் பிரியர்களின் விருப்பத்திற்கு ஏற்றவாறு தொடர்ந்து புதிய கார்களை அறிமுகப்படுத்துவதில், ஹீண்டாய் கார் நிறுவனம் வாடிக்கையாளர்களிடையே






பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

ஹீண்டாய் நிறுவனம் இந்திய சந்தையில் 1998-ம் ஆண்டு அறிமுகமானது முதல். சந்திரா ஹீண்டாயும் தனது கார் விற்பனை சேவையை, கோவை லட்சுமி மில்ஸ் பகுதியில் துவக்கியது.

27 ஆண்டுகளாக ஹீண்டாய் கார் நிறுவனத்துடன் பயணம் செய்து வரும் சந்திரா ஹீண்டாய், தனது 10 வது கிளையைகோவை அவிநாசி சாலையில் 2வது ஷோருமாக சின்னியம்பாளையம் பகுதியில் துவங்கியது.

இதற்கான துவக்க விழா, சந்திரா குழுமங்களின் நிர்வாக இயக்குனர் டாக்டர். நந்தினி ரங்கசாமி மற்றும் சந்திரா ஆட்டோமொபைல் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் முழுநேர இயக்குனர் ரஞ்சித் கோவிந்தராஜ், ஆகியோர் முன்னிலையில் நடை வற்றது. இதில் சிறப்பு விருந்தினர்களாக ஹீண்டாய் நிறுவனத்தின் தென் மண்டல வணிகத் தலைமை அதிகாரி கிரியா சங்கர் மிஸ்ரா, தென் மண்டல வணிக ஒருங்கிணைப்பாளர்திரு. யங்ஹீன் யுன் மற்றும் தமிழ்நாடு மண்டலவிற்பனைத் தலைவர் கௌசிக் சரண் ராமன் ஆகியோர் கலந்துகொண்டு புதிய ஷோரூமை திறந்து வைத்தனர். இதைத் தொடர்ந்து, சமீபத்தில் அறியகமான புதிய ஹீண்டாய் ஆல் நியூ வென்யூ கார் அறிமுகம் நடைபெற்றது.

இதைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய சந்திரா குழுமங்களின் நிர்வாக இயக்குனர் டாக்டர். நந்தினி ரங்கசாமி, கூறியதாவது வாடிக்கையாளர்களின் நலன் கருதி, சந்திரா ஹீன்டாய் தனது சேவைகளைவிரிவுபடுத்திவருவதன் தொடர்ச்சியாக, தற்பொழுது அயினாசி சாலை, சின்னியம்பாளையம் பகுதியில் புதிய ஷோடுமை துவக்கி உள்ளதாக அவர் தெரிவித்தார். விழாவில் புதிய ஹீண்டாய் கார் பதிவு செய்த வாடிக்கையாளர்களுக்கு, கார் சாவி வழங்கப்பட்டது.

இவ்விழாவில் சந்திரா ஹீண்டாய் வாடிக்கையாளர்கள் மற்றும் ஊழியர்கள் உட்பட பலர். கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# எஸ்.ஐ.ஆர்யை செயல்படுத்தி மாநிலத்தின் உரிமைகளை பறிக்கவும் எதிர்காலத்தில் குடியுரிமையை கேள்விக்குறியாக்கும் ஆபத்து இருக்கிறது: தூத்துக்குடியில் கனிமொழி எம்.பி. பேச்சு

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் தூத்துக்குடி மாவட்ட விளையாட்டு மைதானத்தில்தமிழ்நாடு மெர்கன்டைல் வங்கி அறக்கட்டளை மூலம் புதுப்பிக்கப்பட்ட நீச்சல் குளத்தின் திறப்பு விழா இன்று (21/11/2025) தூத்துக்குடி மாவட்ட விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இவ்விழாவில், திமுக துணைப் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி, ஒரு கோடியே 45 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்ட நீச்சல் குளத்தை நீச்சல் வீரர்கள் மற்றும் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில், தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக செயலாளரும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சருமான கீதா ஜீவன் முன்னிலை வகித்தார். தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் க. இளம்பகவத் தலைமை தாங்கினார்.

பின்னர்செய்தியாளர்களை சந்தித்த கனிமொழி கருணாநிதி எம்.பி:

மாநில உரிமைகளையும், உண்மையான கூட்டாட்சியையும் நிலைநாட்டும் நமது போராட்டம் தொடரும் அன்று முதலமைச்சரின் பதிவு குறித்த கேள்விக்கு, திராவிட முன்னேற்ற கழகம்தொடர்ந்துமாநில உரிமைகளாக பேரறிஞர் அண்ணா, கலைஞர், இன்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வரை தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கக் கூடிய ஒரு இயக்கமாக இருக்கிறது. குறிப்பாக, சொல்ல வேண்டும் என்றால் ஒன்றிய பாஜக ஆட்சி பொறுப்பேற்றுக்கொண்டதிலிருந்து, ஒவ்வொரு மசோதாவின் வழியாகவும், எந்தெந்த வழியில் வாய்ப்புகள் கிடைக்கிறதோ அந்தந்த வழிகளில் மாநில உரிமைகளை பறிப்பதிலேயே கவனம் செலுத்தி வருகின்றனர். மாநில உரிமைகள் பறிக்கப்பட்டு வருகிறது.

மாநிலங்களுக்கு தரவேண்டிய நிதி பகிர்வு



சரியா தருவதில்லை. மாநிலங்கள் வைக்கக்கூடிய கோரிக்கைகள் இப்போது மெட்ரோ திட்டம் மதுரை கோவைக்கு கேட்கப்பட்டுள்ளது அதுவும் நிராகரிக்கப்பட்டுள்ளது. இப்படி பல வகைகளில் தமிழ்நாடு வஞ்சிக்கப்படுகிறது. இதற்காக குரல் கொடுப்போம். போராடுவோம் நமது உரிமைகளை மீட்டெடுப்பதற்காக போராடுவோம்.

எஸ்.ஐ.ஆர்-யை கொண்டு வந்து, பாஜக ஆட்சியில் இல்லாத மாநிலங்களில், அங்கு இருக்கக்கூடிய வாக்காளர்களின் ஒட்டுரிமை பறித்துக் கொண்டிருக்கின்றனர் என்பதை நாம் கண்கூடாக பார்த்துக்கொண்டு இருக்கிறோம். எஸ்.ஐ.ஆர்-யை அவசர கதியில் கொண்டுவந்து, வேலைசெய்பவர்களுக்கும் ஒரு பெரிய சுமையாக எஸ்ஐஆர் வேலையை முடிக்கவே முடியாதநிலையைதள்ளப்படுகின்றனர்.

அதை தாண்டி இவ்வளவு குறுகிய காலகட்டத்தில், கிட்டத்தட்ட ஆறு மாத காலத்திற்குள் எஸ்.ஐ.ஆர் பணியை செய்து முடிக்க வேண்டும். தற்போது அவசரக் கதியில் எஸ்ஐஆர் செயல்படுத்த வேண்டிய அவசியமே இல்லாத காலத்தில் இதைசெயல்படுத்தி மாநிலத்தின் உரிமைகளை பறிக்கவும் எதிர்காலத்தில் குடியுரிமையை கேள்விக்குறியாக்கும் ஆபத்தை இருக்கிறது என்பது மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று பேசினார்.

தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, தமிழ்நாடு மெர்கன்டைல் வங்கியின் நிர்வாகஅறங்காவலர் சாலி எஸ்.நாயர், தூத்துக்குடி மெர்கன்டைல் வங்கி அறக்கட்டளை தலைமை நிர்வாக அலுவலர் டாக்டர்.எம். முத்தையா, தூத்துக்குடி மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் ஜெய ரத்தின ராஜன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# தூத்துக்குடி பல்வேறு பகுதியில் கழிவுநீர் கால்வாயில் மழைநீர் தேங்காமல் நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் கீதாஜீவன் நேரில் ஆய்வு

தூத்துக்குடி சட்டமன்ற தொகுதி முழுவதும் கடந்த 19 20 21 ஆகிய நாட்கள் பெய்த வடகிழக்கு பருவமழையால் சில தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கியது. பல்வேறு பகுதியில் இரவு கழிவுநீர் கால்வாய் அமைப்பது தண்ணீர் தேங்காமல் நடவடிக்கை எடுப்பது உள்ளிட்வை சம்பந்தமாக நேரில் சென்று பல்வேறு பகுதியை வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதாஜீவன் ஆய்வு செய்து வரும் நிலையில் மாநகராட்சி 11வது வார்டுக்குட்பட்ட எழில் நகர் பகுதி மக்களின் கோரிக்கையை ஏற்று தூர்வாரப்பட்ட பாதாள சாக்கடை மற்றும் கழிவு நீர் கால்வாய்களை அமைச்சர் கீதாஜீவன் பார்வையிட்டார்

பின்னர் அமைச்சர் கீதாஜீவன் கூறுகையில் கடந்த 10 ஆண்டுகளாக அதிமுகஆட்சியில்எந்தவிதமான அடிப்படை பணிகளையும் முறையாக செய்யவில்லை. அதனால் பல்வேறு பாதிப்புகள் பொதுமக்களுக்கு ஏற்பட்டது. 2021ல் திமுக ஆட்சி அமைந்த பின் திமுக தலைவரும் தமிழக முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் தமிழகத்தில் உள்ள 234 தொகுதிகளுக்கும் தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு பல்வேறு கட்ட நடவடிக்ககைகளை மேற்கொண்டு நிதி ஒதுக்கீடு செய்தும் கடந்த காலங்களில் மழைநீர் தேங்கிய பகுதிகளில் வரும் காலங்களில் தேங்கக்கூடாது பொதுமக்கள் எந்த விதத்திலும் பாதிப்படைய கூடாது என்று கூறிய தின் அடிப்படையில் பணிகளை மேற்கொண்டு வருகிறோம். மாநகராட்சி பகுதியில் கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட பாதிப்புகளை போல் இந்த ஆண்டு இதுவரை கூடுதலாக 9 சென்டிமீட்டர் வரை மழை பெய்துள்ளது. சில காலி மனைகளில் மட்டும் மழைநீர் தேங்கியுள்ளது. மற்றப்படி புதிய கால்வாய் வழித்தடங்கள் அமைக்கப்பட்டதின் வழியாக தண்ணீர்



வெளியேறி சென்றுவிடுகிறது. சில பகுதிகளில் மட்டும் மின்மோட்டார் மூலம் வெளியேற்றப்பட்டன. கடந்த நான்கரை ஆண்டுகால திமுக ஆட்சியில் ஒவ்வொரு குடும்பத்திலும் ஏதாவது ஒரு வகையில் மக்கள் நன்மை அடைந்துள்ளார்கள். புதியதாக பல்வேறு பகுதிகளில் தார் சாலைகள் சிறுகுறு சந்து பகுதிகளில் பேவர் பிளாக் சாலை அமைக்கப்பட்டுள்ளது. எப்போதெல்லாம் திமுக ஆட்சி அமைகிறதோ அப்போதெல்லாம் தமிழகத்திற்கு அது தான் பொற்காலம் காரணம் அனைத்து எல்லாம் என்ற திராவிட மாடல் ஆட்சியில் மக்களுக்கான உரிமைகளை ஒன்றிய அரசிடம் போராடி சில உரிமைகளை பெற்று தரும் கொள்கையோடு முதலமைச்சர்ஸ்டாலின்பணியாற்றிவருவதால்தமிழ்நாட்டில் தமிழர்களின் நலன் மட்டுமின்றி அனைவரின் உரிமையும் பாதுகாக்கப்படுகிறது. எந்த மழை வந்தாலும் இந்தமுறை பொதுமக்களை பாதிக்காத அளவிற்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கையை இந்த அரசு எடுத்துள்ளது. அதனால் பொதுமக்கள் எந்தவித அச்சம்கொள்ளதேவையில்லை. எப்போதும் மக்கள் பணி செய்வது தான் எங்களது கடமை என்ற கடமை உணர்வோடு பணியாற்றி வருகிறோம்என்று கூறினார். ஆய்வின்போது மாநகர திமுக செயலாளர் ஆனந்தசேகரன், கவுன்சிலர் தெய்வேந்திரன், முன்னாள் அறங்காவலர் குழு தலைவர் செந்தில்குமார், வட்டப்பிரதிநிதி பாஸ்கர், மற்றும் மணி அல்பட் உள்பட பலர் உடனிருந்தனர்.

# சிறுதுளி அமைப்பின் சார்பாக தொண்டாமுத்தூர் அருகேவுள்ள, புதுக்காடு மற்றும் கீழ் சித்திரைச் சாவடி அணைக்கட்டு சீரமைக்கும் பணி துவக்கப்பட்டது

## கோவை மாவட்ட ஆட்சியர் பவன்குமார் துவக்கி வைத்தார்

கோவை மாவட்டத்தில் நீர் நிலைகளை பாதுக்காக்கும் வகையில் உருவாக்க பட்டுள்ள சிறுதுளி அமைப்பு, கடந்த



2003 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, நீர்நிலைகளை புனரமைத்தல், மழைநீர் சேகரித்தல், மரம் நடுதல், திட மற்றும் திரவ கழிவு மேலாண்மை மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்று சுற்றுச்சூழலை மேம்படுத்தும் பணிகளை கோவை, மட்டுமின்றி பல்வேறு மாவட்டங்களிலும் செயல்படுத்தி வருகிறது. இதன் ஒரு பகுதியாக 2025 சிறுதுளி அமைப்பானது, கோவை மாவட்ட நிர்வாகம், நீர்வளத்துறை மற்றும் கரூர் வைஸ்யா வங்கியுடன் இணைந்து கோவை தொண்டாமுத்தூர் பகுதியில் உள்ள நொய்யல் ஆற்றின் முக்கிய அணைக்கட்டுகளான "புதுக்காடு மற்றும் கிழ்ச்சித்திரைச்சாவடி அணைக்கட்டுகளை தூர்வாரி புனரமைக்கும் திட்டத்தை துவங்கியது. இதில் சிறப்பு விருந்தினராக கோவை மாவட்டஆட்சியர்பவன்குமார் கலந்துகொண்டு திட்டத்தை துவங்கி வைத்தார். இதில், சிறப்பு விருந்தினர்களாக கரூர் வைஸ்யா வங்கியின் சி.எஸ்.ஆர் தலைமை அலுவலர் நதியா மாலி, சிறுதுளியின் நிர்வாக அறங்காவலர் வனிதா மோகன் மற்றும் நீர்வளத்துறையின் உதவிப்பொறியாளர் நல்லத்தம்பி மற்றும் தமிழ் நாடு விவசாய சங்கதலைவர்கள் சு.பழனிச்சாமி மற்றும் ஆறுச்சாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய வனிதா மோகன் கூறியதாவது.. நொய்யல் ஆற்றில் ஆண்டிற்கு நாற்பதற்கும் குறைந்த நாட்களே மழைநீர் ஓடுவதால் அதனை சேமித்து விவசாயத்திற்கு பயன்படுத்த, நம் முன்னோர்கள் அணைக்கட்டுகளை கட்டி, ஆற்றில் பாயும் நீரின் திசையை மாற்றி வாய்க்கால்கள் மூலம் குளம் மற்றும் குட்டைகளில் சேமித்து வைத்தனர். இது அந்த பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விவசாயம் செழிக்க மற்றும் நிலத்தடி நீர்மட்டம் உயர பெரும்பங்களித்தது. நாட்போக்கில் இந்த அணைக்கட்டுகளில் போதிய பராமரிப்பு மற்றும்தூர்வாரப்படாததால் வண்டல் மண் படிந்து மற்றும் வாய்க்கால்கள் புதர்களுடன் காணப்படுகிறது. இதனால் விவசாயிகள் பாசன மதுகுகளை உபயோகிப்பதில் சிரமம் உள்ளது, இதன் விளைவாக விவசாயம் பாதிக்கப்படுகிறது.

இந்த புனரமைப்பு பணியானது, "நிலத்தடி நீர் வளம் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிக்கும்.

இத்திட்டத்தின் மூலம் 65 மில்லியன் லிட்டர் சேமிப்புதிறனைஉயர்த்த முடியும்

அணைக்கட்டு அருகிலுள்ள விவசாயிகளின் விவசாய உற்பத்தித் திறன் உயர்வு காணும்.

சாகுபடி செய்யப்படும் நிலப்பரப்புவிரிவடையும் என தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.




ஈரோடு மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் நேற்று (21.11.2025) மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறைமற்றும்மாவட்டகுடும்பநலஇயக்கம்சார்பில், மாவட்டஆட்சித்தலைவர் ச.கந்தசாமி ஆண்களுக்கான நவீன கருத்தடை (வாசக்டமி) இருவார விழா (21.11.2025 முதல் 04.12.2025 வரை) நடைபெறுவதை முன்னிட்டு, விழிப்புணர்வு ரதத்தினை கொடியசைத்து துவக்கி வைத்தார்.



ஈரோடு மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் நேற்று (21.11.2025) மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறைமற்றும்மாவட்டகுடும்பநலஇயக்கம்சார்பில், மாவட்டஆட்சித்தலைவர் ச.கந்தசாமி ஆண்களுக்கான நவீன கருத்தடை (வாசெக்டமி) இருவார விழா (21.11.2025 முதல் 04.12.2025 வரை) நடைபெறுவதை முன்னிட்டு, அமைக்கப்பட்டிருந்த கருத்துக்காட்சி அரங்கினை பார்வையிட்டார்.

# துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் 48 வது பிறந்த நாளை முன்னிட்டு மாநில அளவிலான சதுரங்கம் ஓவியம், கட்டுரை போட்டி



திராவிட முன்னேற்றக்கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் 48 வது பிறந்த நாளை முன்னிட்டு மாநில அளவிலான சதுரங்கம் ,ஓவியம், கட்டுரை, திருக்குறள் ஒப்புவித்தல் ஆகிய போட்டிகள் இன்று 22.11.2025 சனிக்கிழமையன்று ஈரோடு மாநகர் பேருந்து நிலையம் அருகில் உள்ள மல்லிகை அரங்கத்தில் காலை 8:00 மணியளவில் ஈரோடு தெற்குமாவட்டதிமுககழகசெயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புறவளர்ச்சி, மதுவிலக்குமற்றும்ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில், திமுக கழக துணைப் பொதுச்செயலாளர் அந்தியூர் ப.செல்வராஜ் MP , மாநில இளைஞரணி துணைச் செயலாளர், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் MP , மாநில இளைஞரணி துணை செயலாளர், மண்டலம்-4 ன் பொறுப்பாளர் P.S.சீனிவாசன் இணைச்செயலாளர் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார் MLA , மாநகரக் மு.சுப்பிரமணியம் , ஈரோடு மாநகராட்சி மேயர், நாகரத்தினம் சுப்பிரமணியம் , மாநகராட்சி துணை மேயர் வி.செல்வராஜ், கோட்டை திமுக பகுதி செயலாளர் பொ. இராமச்சந்திரன் , கே.டி.சேர்ந்தபுகழன் , 36வது வட்டக் க செயலாளர் லோ.ஹரிஹரன் , 36 வது வட்ட மாமன்ற உறுப்பினர் பழனியப்பா நா.செந்தில்குமார், கோட்டைபகுதி அமைப்பாளர் கு.ஹரிபிரசாந்த் மற்றும் ஈரோடு தெற்கு மாவட்ட இளைஞரணி துணைஅமைப்பாளர்கள் கி.ரகுராம் ச.சதீஸ்குமார், எஸ்.எஸ்.விஜயராஜன், இரா.நித்தின் மற்றும் மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள் பா.ஜாகிர் உசேன், செ.ரமேஷ், எஸ்.சசிக்குமார், அ.பார்த்திபன், பெ. சீனிவாசன், வி.நவீன்குமார், அ.அன்பரசன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது. எனவே மாநில ,மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வட்ட கழக நிர்வாகிகள் , சார்பு அணி நிர்வாகிகள் , இளைஞர் அணி தோழர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் வரவேற்பதாக ஈரோடு தெற்கு மாவட்ட திமுக இளைஞரணி மாவட்டஅமைப்பாளர்ஜெ.திருவாசகம்தனதுஅறிக்கையில் தெரிவித்துள்ளார்



தமிழ்நாடு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேற்று (21.11.2025) ஈரோடு மாவட்டம், சித்தோடு ஆவின் பால்பண்ணை வளாகத்தில் பால்வளத்தந்தை எஸ்.கே.பரமசிவன் முழு திருவுருவச்சிலை அமைக்கப்பட்டு வரும் பணியினை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் அவர்கள் உட்பட பலர் உள்ளனர்.




ஈரோடு மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் கொங்கு பொறியியல் கல்லூரியில் (20.11.2025) நேற்று நடைபெற்ற "மாபெரும் தமிழ்க் கனவு" நிகழ்ச்சியில் தமிழ் பெருமித உரை வாசிப்பு மற்றும் சிறப்பாக பேசிய மாணவ மாணவியர்களுக்கு பாராட்டுச்சான்றிதழ்களை வழங்கினார்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (21.11.2025) நேற்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாய பெருமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெற்று, குறைகள் கேட்டறிந்தார்.



ஈரோடுமாவட்டதேர்தல்அலுவலர்/மாவட்டஆட்சித்தலைவர்ச.கந்தசாமி(20.11.2025)அன்றுமாணிக்கம்பாளையம் பகுதியில் நடைபெற்ற வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் 2026 உதவி மையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.



ஈரோடு பெரிய மாரியம்மன் நில மீட்பு இயக்கம் சார்பில் ஈரோட்டில் 80 அடி சாலை திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்றும் நீதிமன்ற உத்தரவின் படி ஆக்கிரமிப்பில் உள்ள நிலத்தை கையகப்படுத்த வேண்டும் என்றும் தொடர்ந்து கோரிக்கை விடுக்கப்பட்டு வருகிறது. இந்த கோரிக்கையை வலியுறுத்தி நில மீட்பு இயக்க நிர்வாகிகள் ஈரோடு மாவட்ட ஆட்சியர் ச.கந்தசாமியை நேற்று (21112025) சந்தித்து கோரிக்கை மனு கொடுத்தனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (21.11.2025) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பட்டுவளர்ச்சித்துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கருத்துக்காட்சி அரங்கினை பார்வையிட்டார்.

# அச்சிறுப்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் நாய் கடிக்கு மருந்து இல்லை

## மூதாட்டியை திருப்பி அனுப்பி வைத்த சோகம்... கண் துடைப்புக்காக ஆரம்ப சுகாதார நிலையம் இயங்குவதாக அப்பகுதி மக்கள் வேதனை



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அச்சிறுப்பாக்கம் பகுதியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வருகிறது இங்கு அச்சிறுப்பாக்கம், தொழுப்பேடு, கடமலைப்புத்தூர், சீதாபுரம், அத்திவாக்கம், நேமம், உள்ளிட்ட இருவதற்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளது இங்கு உள்ள மக்கள் அவர்களுக்கு ஏதாவது உடல் உபாதிகள் ஏற்பட்டால் உடனடியாக அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவம் பார்ப்பார்கள் தற்பொழுது அச்சரப்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் போதிய அளவு மருத்துவர் இல்லாமலும் மருந்துகள் இல்லாமலும் பொதுமக்கள் சார்பில் தொடர்ந்து புகார் தெரிவித்து வந்தன இந்த நிலையில் இன்றைய தினம் வடக்கு நகர் பகுதியில் வசிப்பவர் புஷ்பராணி வயது 60 இந்த மூதாட்டி நடந்து செல்லும் போது இரண்டு தெரு நாய்கள் மூதாட்டியை காலில் பலமாக கடித்துள்ளது உடனடியாக அக்கம்பக்கத்தினர் நாயை விரட்டிவிட்டு மூதாட்டியை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அழைத்து வந்தனர் அங்கு பணியில் இருந்த செவிலியர் ஒருவர் நாய் கடிக்கு எல்லாம் இங்கமருந்து இல்ல நீங்க மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு போங்க என்று அலட்சியமாக பதில் அளித்துள்ளார் உடனடியாக மூதாட்டியின் பேரன் மருத்துவர் இல்லையா என்றும் முதலுதவியாச்சி செய்யுங்க என்று கேட்டுள்ளார் அதற்கு மருத்துவர் இல்லை நான் வேண்டுமென்றால் ஒருடிடி இன்ஜெக்ஷன் போடுகிறேன் என அலட்சியமாக பதில் அளித்துள்ளார் உடனடியாக மூதாட்டியை மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சைக்காக அனுமதித்தனர். சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் உடனடியாக ஆய்வு செய்து பணியில்வராமல்இருந்த மருத்துவரை உடனடியாக பணியிடை நீக்கம் செய்ய வேண்டும் என்றும் பொதுமக்களிடம் ஒருமையில் பேசும் செவிலியர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அதேபோல் 24 மணி நேரமும் சுழற்சி முறையில் மருத்துவரை பணியமத்தி போதிய அளவு மருந்துகளை இருக்கவழிவகைசெய்ய வேண்டும்என்பதேஅப்பகுதி மக்களின் கோரிக்கையாக உள்ளது

# மதுராந்தகம் சார்பதிவாளர் அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு போலீசார் சோதனை

## பத்தாயிரம் லஞ்சம் பெற்ற சார்பதிவாளர் உட்பட இருவர் கைது




செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அருகே உள்ள ஈசூர் கிராமத்தை சேர்ந்தவர் சிவராமன் இவருக்கு சொந்தமான இவரது மனைவி கலா பெயரில் உள்ள 15 சென்ட் இடத்தில் மூன்று சென்ட் இடத்தை சிவம் தொண்டு நிறுவனத்திற்கு தானம் செய்ய.

அதற்கு மதுராந்தகம் சார்பதிவாளர் கார்த்திகேயன் லஞ்சமாக 25,000 கேட்டு உள்ளார்

இறுதியாக பேசி ரூபாய் 15 ஆயிரம் தொகை பத்திரப்பதிவு அன்று பத்தாயிரமும் மீதி பத்திரம் வாங்கும் பொழுது ஐயாயிரம் கொடுக்க பேசி முடிவெடுத்தனர்

ஆகவேசிவராமன்அவர்கள்கொடுத்தபுகாரின் பேரில் சிவராமன் இன்று பத்திரப்பதிவு செய்ய உள்ள இருந்த நிலையில் இன்று பத்தாயிரம் சார் பதிவாளர் லஞ்ச பணம் பெற்றதால் லஞ்ச ஒழிப்பு போலீஸ் சார்சார் பதிவாளர் கார்த்திகேயன் அவருக்கு உடந்தையாக இருந்த பத்திர எழுத்தர் சிவா ஆகிய இருவரை கைது செய்தனர்.




ஈரோடு மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் கொங்கு பொறியியல் கல்லூரியில் (20.11.2025) அன்று நடைபெற்ற "மாபெரும் தமிழ்க் கனவு" நிகழ்ச்சியில் பேசிய போது எடுத்த புகைப்படம்.

# Trump Plan Targets Florida, California For Coastal Oil Drilling



*The Trump administration is proposing to open new areas off of California, Florida and Alaska to crude drilling as part of a draft blueprint released Thursday that would dramatically expand the sale of oil and natural gas rights.*

*In all, the Interior Department is proposing as many as 34 offshore lease sales including 21 off the coast of Alaska, six along the Pacific Coast and seven in the Gulf of Mexico, including waters near Florida and Alabama that have been off limits for three decades. Republican leaders in those southern states have long opposed drilling in such sensitive areas because of concern about the potential for oil spills that could cripple important industries like fishing and tourism.*

*As proposed, the leasing plan marks a dramatic expansion of energy exploration that would open more than 1 billion acres of coastal zones to drilling.*

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.